இந்திய தூதரகம்
கோலாலம்பூர், மலேசியா

## செய்தி அறிக்கை

## 2017-18ஆம் ஆண்டிற்கான 'இந்திய உதவித்தொகை & அறக்கட்டளை நிதியிடமிருந்து' (ISTF) நிதி உதவி

மலேசியாவிலுள்ள பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பாலிடெக்னிக் மற்றும் பிற கல்வி நிறுவனங்களில் தங்களது முழு நேர கல்வியைத் தொடரும் மலேசிய இந்திய வம்சாவளி மாணவர்கள், இந்திய உதவித்தொகை & அறக்கட்டளை நிதியின் (Indian Scholarship & Trust Fund-ISTF) கல்வி உதவித்தொகையை விண்ணப்பிக்க கோலாலம்பூரிலுள்ள இந்திய தூதரகம் அழைக்கின்றது.

2. **தகுதியானவர்கள்:**

- மலேசியாவிலுள்ள பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பாலிடெக்னிக் மற்றும் பிற கல்வி நிறுவனங்களில் முழு நேர சான்றிதழ் (Diploma) மற்றும் இளங்கலை (Bachelor) கல்வியை மேற்கொள்ளும் மாணவர்கள் இந்த ISTF கல்வி உதவித்தொகையைப் பெறுவதற்கு பின்வரும் இணைப்பின் மூலம் விண்ணப்பிக்கலாம். http://indianhighcommission.com.my/Pdf/ISTF-Appln-Form-2017-18.pdf.

- தகுதியான மாணவர்கள் தேவையான இணைப்புகளோடு தங்களது விண்ணப்பங்களைக் கீழ்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

**High Commission of India,**
**Education Wing (ISTF Scholarship),**
**Level 28, Menara 1 Mon't Kiara, ,**
**No 1, Jalan Kiara, Mon't Kiara,**
**50480 Kuala Lumpur.**
**Tel: 03 6205 2350 ext 203.**

- ஒரு குடும்பத்தில் ஒருவர் மட்டுமே இந்த கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க முடியும்.

- **<u>ஜூலை 22, 2017ஆம்</u>** தேதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் மதிப்பீட்டிற்கு ஏற்றுக் கொள்ளப்படாது.

**3. தகுதி அற்றவர்கள் :**

- முதுகலை மற்றும் உயர்நிலை கல்வியை மேற்கொள்ளும் மாணவர்கள்.
- பகுதி நேரம் கல்வியை மேற்கொள்ளும் மாணவர்கள்.
- ஏற்கனவே இந்திய உதவித்தொகை & அறக்கட்டளை நிதி (ISTF) கல்வி உதவித்தொகையைப் பெற்ற மாணவர்கள்.

4. தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் செப்டம்பர் 2017இல் நேர்காணலுக்கு அழைக்கப்படுவர். தகுதியானவர்கள் மட்டுமே இந்திய உதவித்தொகை & அறக்கட்டளை நிதி (ISTF) கல்வி உதவித்தொகையை அக்டோபர் 2017இல் பெறுவர்.

********